**சிவகாசி மாநகர்மன்றம்**
**சாதாரணக் கூட்டம்**

**மாநகராட்சி அலுவலகம்.**

**சாதாரணக் கூட்டம் எண் .** **நாள்:17.11.2021.**

நிகழும் திருவள்ளுவராண்டு 2052 பிலவ வருடம் கார்த்திகை திங்கள் 1 ஆம் நாள் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற மாநகர்மன்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திருமதி.லலிதாமணி,B.E.,**
**தனி அலுவலர்.**

**பொருள் :**

1. சிவகாசி நகராட்சி உருவாக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நடைபெறும் நிலையில் சிவகாசி நகராட்சிக்கு சாலை, பூங்கா, மின்விளக்கு, வடிகால் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 09.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில் வார்டு எண்-16 மற்றும் 24ல் ஆர்.ரி.சர்ச் அருகில் சிறு பாலம் அமைக்கும் பணிக்கு தொகை ரூ.25,00,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு அதன்படி வரப்பெற்றுள்ள கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பட்டுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலாஜி கன்ஸ்ட்ரக்சன்,<br>எட்டக்கபட்டி | 1.1% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | திரு.G..ஜானகிராமன்,<br>சிவகாசி - 626189. | 4.5 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ பாலாஜி கன்ஸ்ட்ரக்சன் என்பவர் மதிப்பீட்டினை விட 1.1 சதவீதம் கூடுதல் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளார். விலை குறைப்பு செய்துதரக்கோரி அறிவிப்பு கடிதம் அனுப்பிய பின் விலை குறைக்காமல் மதிப்பீட்டு விலையை விட 1.1% அதிகமாக செய்து தர சம்மதம் கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்ததாரருக்கு பணி செய்ய மன்ற அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்டப்பணி மதிப்பீட்டு தொகையான ரூ.25.00 இலட்சத்திற்குள் செய்து முடிக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.1635/2020/இ1
மன்ற அனுமதி எண்-1312

2. சிவகாசி நகராட்சி உருவாக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நடைபெறும் நிலையில் சிவகாசி நகராட்சிக்கு சாலை, பூங்கா, மின்விளக்கு, வடிகால் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 09.11.2021 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி மூன்றாம் அழைப்பு கோரப்பட்ட நிலையில் பூங்காக்கள் அமைக்கும் பணிக்கு தொகை ரூ.2,00,00,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு அதன்படி வரப்பெற்றுள்ள கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பட்டுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | V.நாதன்<br>A.பாடுவனேந்தல்,<br>கடலாடி தாலுகா,<br>இராமநாதபுரம் மாவட்டம். | 4.18% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S RK & Co, மதுரை அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்பதகுதி இல்லாததாலும், மேற்கண்ட பணிக்கு இது மூன்றாம் அழைப்பு என்பதாலும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்த திரு. V.நாதன், A.பாடுவனேந்தல், கடலாடி என்பவர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் அன்னார் மதிப்பீட்டினை விட 4.18 சதவீதம் கூடுதல் ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளார். விலை குறைப்பு செய்துதரக்கோரி அறிவிப்பு கடிதம் அனுப்பிய பின் விலை குறைக்காமல் மதிப்பீட்டு விலையை விட 4.18 % அதிகமாக செய்து தர சம்மதம் கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்ததாரருக்கு பணி செய்ய மன்ற அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்டப்பணி மதிப்பீட்டு தொகையான ரூ.200.00 இலட்சத்திற்குள் செய்து முடிக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.1635/2020/இ1

மன்ற அனுமதி எண்-1313

3. சிவகாசி நகராட்சி உருவாக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நடைபெறும் நிலையில் சிவகாசி நகராட்சிக்கு சாலை, பூங்கா, மின்விளக்கு, வடிகால் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 09.11.2021 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி மூன்றாம் அழைப்பு கோரப்பட்ட நிலையில் அலங்கார விளக்குகள் அமைக்கும் பணிக்கு தொகை ரூ.1,06,00,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு அதன்படி வரப்பெற்றுள்ள கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பட்டுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் திருநெல்வேலி . | 4.48% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ குமார் ஏஜென்ஸிஸ் நிருவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்பதகுதி இல்லாததாலும், மேற்கண்ட பணிக்கு இது மூன்றாம் அழைப்பு என்பதாலும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்த ஸ்ரீ கங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி நிருவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் அன்னார் மதிப்பீட்டினை விட 4.48 சதவீதம் கூடுதல் ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளார். விலை குறைப்பு செய்துதரக்கோரி அறிவிப்பு கடிதம் அனுப்பிய பின் விலை குறைக்காமல் மதிப்பீட்டு விலையை விட 4.48 % அதிகமாக செய்து தர சம்மதம் கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்ததாரருக்கு பணி செய்ய மன்ற அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்டப்பணி மதிப்பீட்டு தொகையான ரூ.106.00 இலட்சத்திற்குள் செய்து முடிக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.1635/2020/இ1

மன்ற அனுமதி எண்-1314

4. சிவகாசி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண் TN67W5156 க்கு தகுதி சான்று பெறவேண்டியுள்ளதால் அந்த வாகனத்தில் உள்ள பழுது நீக்கப் பணிகளை செய்ய தொகை ரூ.72,950/-க்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண் 1305, நாள்:25.10.2021 ம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது அதன் படி இப்பணிக்கு 29.10.2021-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு

ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1. | நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி | 72,950 /- |
| 2. | வேங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி | 73,950/- |

அலுவலகக் குறிப்பு :

அ) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், சிவகாசி தந்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவுவழங்கி மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம் . மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

ந.க.எண்: 5838/2021/இ2
மன்ற அனுமதி எண்-1315

5. சிவகாசி மாநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண் TN67J 1945 க்கு பழுது பணிகளை AUTOMOTIVE MANUFACTURERS PVT.LTD –MADURAI- நிறுவனத்தின் மூலம் வாகனத்தில் உள்ள பழுது பணிகள் பார்க்கவும் , அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.83,391/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணியினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண் : 5837 /2021/இ2
மன்ற அனுமதி எண்-1316

6. சிவகாசி மாநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண் TN67J 1945 க்கு பழுது பணிகளை AUTOMOTIVE MANUFACTURERS PVT.LTD –MADURAI- நிறுவனத்தின் மூலம் வாகனத்தில் உள்ள பழுது பணிகள் பார்க்க தொகை ரூ.73659/- க்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது , வாகனம் எண் TN67J 1945 க்கு பழுது பணிகள் மேற்கொள்ளும் போது சில பணிகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட வகையில் அதற்கான செலவு தொகை ரூ.83,391/-க்கு பணிமுடிக்கப்பட்டு பட்டியல் AUTOMOTIVE MANUFACTURERS PVT.LTD –MADURAI- நிறுவனத்தின் மூலம் வரப்பட்டுள்ளது. ஏற்கனவே , தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்ற தொகை ரூ.73,659/-ம் கூடுதலாக பழுது பணிகள் மேற்கொண்ட வகையில் தொகை ரூ.9,732/-க்கும் சேர்த்து மொத்தம் தொகை ரூ.83,391/-ஐ AUTOMOTIVE MANUFACTURERS PVT.LTD –MADURAI- நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண் : 5837 /2021/இ2
மன்ற அனுமதி எண்-1317

s/d தனி அலுவலர்,
சிவகாசி மாநகர்மன்றம்.